# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்கள் - செயல்பாடுகள் - இளம் அறிவியல் மாணவர் சேர்க்கை!

## வேளாண்மை – உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் ஆய்வுக் கூட்டம்!

சென்னை, ஜூலை 23 -

வேளாண்மை உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகத்தின் ஆராய்ச்சித் திட்டங்கள், செயல்பாடுகள் மற்றும் இளமறிவியல் மாணவர் சேர்க்கை குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

அதன் விவரம் வருமாறு:-

தமிழ்நாடு அரசு வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கைகளின் மூலம் பல்வேறு வேளாண் நலத்திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் வேளாண் கல்வி, ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கத்தினை மேம்படுத்திட தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு நிதி வழங்கி வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சிகள், செயல்பாடுகள் மற்றும் இளமறிவியல் மாணவர் சேர்க்கை குறித்த ஆய்வுக் கூட்டம், வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் 21.7.2025 அன்று தலைமை செயலகத்தில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் , தமிழ்நாட்டில் காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் வகையில் புதிய வேளாண் பயிர் இரகங்கள் மற்றும் தொழில்நுட்பங்களை கண்டறிந்து உழவர்களிடையே அறிமுகப்படுத்த வேண்டும் என கேட்டுக் கொண்டார். மேலும், நெல், சிறுதானியங்கள், பயிறுவகைப் பயிர்கள்,



எண்ணெய்வித்துப்பயிர்கள், கரும்பு ஆகியவற்றில் பகுதிக்கேற்ற உழவர்களால் பெரிதும் விரும்பப்படும் அதிக மகசூல் தரவல்ல இரகங்களை உருவாக்கி உற்பத்தியை பெருக்கவேண்டும் எனவும், நெல் சாகுபடியில் எக்டருக்கு எட்டு டன் மகசூல் மற்றும் கரும்பு சாகுபடியில் எக்டருக்கு 125 டன்கள் கொடுக்கக்கூடிய இரகங்களை உருவாக்கி உழவர்களுக்கு வழங்க வேண்டும் எனவும் பல்கலைக்கழக விஞ்ஞானிகளுக்கு அறிவுரை வழங்கினார்.

காய்கறிகள் மற்றும் பழப் பயிர்களில் புதிய இரகங்கள் உருவாக்குவதோடு, தமிழ்நாட்டில் நிலவும் வேளாண் தொழிலாளர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய புதிய வகையான பண்ணை இயந்திரங்கள் மற்றும் கருவிகளை உருவாக்கி உழவர்களின் பயன்பாட்டிற்கு வழங்கவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தால் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஆராய்ச்சித்திட்டங்களான காலநிலை மாற்றத்தின் தாக்கங்களைக் குறைப்பதற்கான சிறப்பு வேளாண் கிராமங்கள் உருவாக்குதல், குறைந்த சர்க்கரை அளவுக் குறியீடு (Low Glycemic Index) கொண்ட நெல் இரகங்களை உருவாக்குதல், நுண்ணுயிர்க் கலவையின் (Microbial Consortium) மூலம் மண்வள மேம்பாடு, போன்ற அனைத்து வேளாண் ஆராய்ச்சி திட்டங்களையும் உழவர்கள் பயன்பெறும் வகையில் விரைந்து செயல்படுத்துமாறு அறிவுறுத்தினார்.

மேலும், பாரம்பரிய பயிர் இரகங்களை சேகரித்து அவற்றைப் பாதுகாத்து, மதிப்பீடு செய்து பல்வேறு ஆராய்ச்சித்திட்டங்களை மேற்கொள்ளவும் மரபு சார்ந்த மற்றும் நவீன இனப்பெருக்க வழிகளின் மூலம் காலநிலை மாற்றத்திற்கு ஏற்ற அதிக மகசூல் தரக்கூடிய இரகங்கள் மற்றும் வறட்சி, களர் உவர் நிலங்கள், வெள்ளப் பாதிப்புகளை தாங்கி வளரும் தன்மைகொண்ட இரகங்களைகண்டறியுமாறும் வேளாண்மைஉழவர் நலத்துறை அமைச்சர் அறிவுறித்தினார். துரிதவழி பயிர் இனப்பெருக்கம் வாயிலாக குறைந்த வயது மற்றும் அதிக மகசூல் தரக்கூடிய புதிய பயிர் இரகங்களை விரைவில் கண்டறியவும், கரும்பில் அதிக சர்க்கரைக்கட்டுமானம், உயர் விளைச்சல், நோய் மற்றும் பூச்சி எதிர்ப்பு சக்தி கொண்ட இரகங்களை ஆராய்ச்சி மூலம் உருவாக்கிடவும் கரும்பு ஆராய்ச்சி விஞ்ஞானிகளுக்கு அறிவுரை வழங்கப்பட்டது.

உழவர்கள் நலன் கருதி, அதிக உற்பத்தித்திறன் கொண்ட, பிற மாநில பயிர் இரகங்களில், தமிழ்நாட்டிற்கு உகந்த இரகங்களைக் கண்டறிந்து, அறிவிக்கை செய்திட உரிய நடவடிக்கை எடுக்குமாறும், வல்லுநர் விதை உற்பத்தியினை அதிகரிக்குமாறும் கேட்டுக்கொண்டார், வேளாண்மை மற்றும் தோட்டக்கலை துறை சார்ந்த அலுவலர்களுடன் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக் கழகமும் இணைந்து தரமான விதைகளை உற்பத்தி செய்து உழவர்களுக்கு வினியோகம் மற்றும் தொழில்நுட்ப பரவலாக்கம் செய்திடவும், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய ஆராய்ச்சித் திட்டங்களை வகுத்து செயல்படுத்திடவும் அறிவுரைகள் வழங்கினார்.

உழவர்களுக்கு கூடுதல் வருமானம் பெறும் வகையில் செஞ்சந்தனம், சந்தனம், தேக்கு, மகோகனி போன்ற மரப்பயிர்களை பயிரிட ஊக்குவிப்பதுடன் ஊடுபயிர் சாகுபடிக்கேற்ற பயிர்களை ஆராய்ச்சி மூலம் கண்டறிந்து, உழவர்களிடையே பரவலாக்கம் செய்திட அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வுக்கூட்டத்தில் வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் செயலர், வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மைத் துறை இயக்குநர், பா.முருகேஷ், சர்க்கரைத்துறை இயக்குநர், த.அன்பழகன், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர், பெ. குமாரவேல் பாண்டியன், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக பதிவாளர்/ துணைவேந்தர்(பொறுப்பு), சு.தமிழ்வேந்தன் மற்றும் வேளாண் விஞ்ஞானிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# கீழடி அகழாய்வு அதிகாரியை மாற்றியதற்கான காரணம் என்ன?

## மக்களவையில் – தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!

புதுடெல்லி, ஜூலை 23-

தென்சென்னை தொகுதி மக்களவை உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில், கீழடி அகழாய்வு தொடர்பான கேள்விகளை முன் வைத்திருந்தார். குறிப்பாக, தொல்பொருள் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணாவின் கீழ் தயாரிக்கப்பட்ட அறிக்கை அரசாங்கத்தால் அதிகாரப்பூர்வமாக மதிப்பாய்வு செய்யப்பட்டதா?

அல்லது நிராகரிக்கப்பட்டதா?

தொல்பொருள் ஆய்வாளரை மீண்டும் மீண்டும் மாற்றுவதற்கான காரணம் என்ன? என்பன உள்ளிட்ட கேள்விகளை கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் கஜேந்திரசிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வ



மாக பதில் அளித்தார்.

அந்த பதிலில் கூறப்பட்டு இருப்பதாவது:-

இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் ஆராய்ச்சியாளர்களால் நடத்தப்படும் அகழாய்வுகள் ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் செய்யப்படுகின்றன. இந்த காலக்கட்டத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் அகழாய்வுகளுக்கு தலைமை தாங்கியிருக்கலாம்.

தொல்பொருள் ஆய்வு மைய நிபுணர்களால் சரிபார்க்கப்படும் அகழாய்வின் அறிக்கையை முன்னணி தொல்பொருள் ஆராய்ச்சியாளர் சமர்ப்பிக்கிறார். இது முறையாக சரிபார்க்கப்பட்ட பிறகு, தொல்பொருள் ஆய்வு மையம் அதிகாரப்பூர்வ அறிக்கையை வெளியிடுகிறது.

இந்திய தொல்பொருள் ஆய்வு மையத்தின் மேற்பார்வையின் கீழ் கீழடி அகழாய்வு நடத்தப்பட்டுள்ளது. இதில் முன்னணி தொல்பொருள் ஆய்வாளரின் அறிக்கை மதிப்பாய்வில் உள்ளது. நிபுணர்களின் கருத்துகள் முன்னணி தொல்பொருள் ஆய்வாளருடன் பகிர்ந்து கொள்ளப்பட்டுள்ளன. அவை இன்னும் இறுதி செய்யப்படவில்லை.

சமர்ப்பிக்கப்பட்ட ஒரு அறிக்கையை நிராகரிக்கும் நடைமுறை இல்லை. கீழடி அகழாய்வை தமிழ்நாடு மாநில தொல்பொருள் துறை நடத்தி வருகிறது.

தொல்பொருள் அதிகாரிகளுக்கு பணிகளை ஒதுக்குவது ஒரு வழக்கமான நிர்வாக காரணமாகும். நாட்டில் அகழாய்வுகள் பண்டைய நினைவுச்சின்னங்கள் மற்றும் தொல்பொருள் தளங்கள் மற்றும் எச்சங்கள் சட்டம் 1958 மற்றும் 1959 விதிகளின்படி நடத்தப்படுகின்றன. கீழடி அகழாய்வின் அடிப்படையில் துல்லியமான கண்டுபிடிப்புகளை வெளியிடுவதற்கான சட்டம் மற்றும் உரிய அறிவியல் செயல்முறையைப் பின்பற்ற தொல்பொருள் ஆய்வு மையம் முழுமையாக உறுதி பூண்டுள்ளது.

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.



ஆலந்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கொளப்பாக்கம் ஊராட்சியில் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மனுக்கள் பதிவு செய்வதை பார்வையிட்டு, உடனடி தீர்வு காணப்பட்ட மனுக்களுக்கு சான்றிதழ்களை குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் பயனாளிகளிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சி தலைவர் படப்பை ஆ.மனோகரன், குன்றத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் ஏ.வந்தேமாதரம், குன்றத்தூர் ஒன்றியக்குழு தலைவர் சரஸ்வதி மனோகரன், துணைத் தலைவர் உமா மகேஸ்வரி வந்தேமாதரம் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தி.மு.க.
இளைஞர் அணி

சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி!

இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைதளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம் 2–இல் கீழ்க்கண்ட 3 சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைதளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
| --- | --- | --- | --- |
| 26.07.2025 சனிக்கிழமை | காலை 10.00 மணி | பொன்னேரி | வெங்கடேஸ்வரா திருமண மண்டபம், பொன்னேரி, திருவள்ளூர். |
| 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | கும்மிடிப்பூண்டி | எஸ்.வி.கே.மஹால், சத்தியவேடு சாலை, கவரைப்பேட்டை, திருவள்ளூர். |
| 03.08.2025 ஞாயிற்றுக்கிழமை | காலை 10.00 மணி | திருத்தணி | எஸ்.வி.கே.பேலஸ், திருத்தணி, திருவள்ளூர். |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை–18
நாள் : 22-07-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


‘ஓரணியில் தமிழ்நாடு’:

# கழக மாணவர் அணியின் விழிப்புணர்வுப் பிரச்சாரம்!

கழகத் தலைவரின் சீரிய முயற்சியில் மக்களை ஒன்றிணைக்கும் “ஓரணியில் தமிழ்நாடு” என்னும் மாபெரும் முன்னெடுப்பிற்கு வலு சேர்க்கும் விதமாக தமிழ்நாடு முழுவதும் உள்ள கல்லூரிகளில் கழக மாணவர் அணி துண்டறிக்கை மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொள்கிறது.

முதற்கட்டமாக கழக மாணவர் அணியின் மாநிலச் செயலாளர் இரா.ராஜீவ்காந்தி கோவையிலும், மாநிலத் துணை செயலாளர்கள் மன்னை த.சோழராஜன் ம.இரா அரசு கலைக் கல்லூரி – மன்னார்குடி, சேலம் இரா.தமிழரசன் அரசு கலைக் கல்லூரி – சேலம் 7, அதலை பி.செந்தில் குமார் எஸ். வெள்ளைச்சாமி நாடார் கலை அறிவியல் கல்லூரி – மதுரை, தமிழ் கா.அமுதரசன் மாநிலக் கல்லூரி – சென்னை, பி.எம்.ஆனந்த்பிஷப் ஹீபர் கலை அறிவியல் கல்லூரி – திருச்சி, வி.ஜி.கோகுல் அரசு கலைக் கல்லூரி – கோவை, திருமதி பூர்ண சங்கீதா சின்னமுத்து எஸ்.எஸ்.ஏ. கலை அறிவியல் கல்லூரி, சிங்கம்புணரி, சிவகங்கை, திருமதி ஜெ.வீரமணி சிக்கய்ய அரசு கலைக் கல்லூரி – ஈரோடு, ஜெ.இராமகிருஷ்ணன் தாகூர் கலை அறிவியல் கல்லூரி – குரோம்பேட்டையிலும் ஓரணியில் தமிழ்நாடு குறித்த விழிப்புணர்வு பிரச்சாரத்தைத் தொடங்கி வைத்தனர்.

அவர்களைத் தொடர்ந்து ஒவ்வொரு கழக மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர்களும் அவரவர் மாவட்டங்களில் கல்லூரிகளின் வாசல்களில் மாணவர்களிடையே துண்டுப் பிரசுரம் மூலம் விழிப்புணர்வுப் பிரச்சாரம் மேற்கொண்டனர்.

கல்வியில் சிறந்த தமிழ்நாடு எனத் தலைப்பிட்டு, ”இந்திய மாநிலங்களில் தமிழ்நாடு மட்டும்தான் கல்விக்கு மிகவும் முக்கியத்துவம் அளிக்கிறது. அதற்குக் காரணம் மற்ற மாநிலங்களில் இருக்கும் தலைவர்களுக்குக் கல்வியின் முக்கியத் துவம் பற்றிய புரிதல் ஏற்படும் முன்பே இங்கே நீதிக் கட்சி, திராவிட இயக்கம் கல்வி குறித்த விழிப்புணர்வைக் கொண்டுவந்து அது எல்லோருக்குமானதாக்கப் பல்வேறு புரட்சிகரத் திட்டங்களைக் கொண்டுவந்தன.



இரா.ராஜீவ்காந்தி
செயலாளர்
கழக மாணவர் அணி

நம் பெயருக்குப் பின் சாதி இருப்பதைவிட பி.ஏ., எம்.ஏ., பி.எஸ்சி, எம்.எஸ்சி., பி.இ., எம்.பி.பி.எஸ் எனக் கல்விப் பட்டங்கள் இருப்பதைத்தான் திராவிட இயக்கம் விரும்பியது. அதற்காகப் போராடியது. தந்தை பெரியார் பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களுக்குக் கல்வி வேண்டும் என்பதற்காகக் கல்வியில் இட ஒதுக்கீடு வேண்டுமெனப் போராடினார். நீதிக்கட்சி தொடங்கப்பட்ட பின்னர் பொதுப் பள்ளிகள் தொடங்கப்பட்டு கல்வி ஒரு சாதிக்கு, ஒரு தரப்பினருக்கு மட்டுமே என்று இருந்ததை எல்லோருக்கும் பொதுவாக்கினார்கள்.

தொடர்ச்சியாகப் பொதுப்பள்ளிகள் மூலம் மாநகரப் பள்ளிகளைத் தொடங்கினர். அதன் பிறகு கர்மவீரர் காமராஜர் ஊர்தோறும் பள்ளிகளைத் திறந்து மதிய உணவுத் திட்டத்தைக் கொண்டுவந்தார். தந்தை பெரியார் காமராஜருக்கு ஆதரவாக அரசியல் பிரச்சாரம் செய்து புரவலர்களைத் திரட்டி சுயநிதிப் பள்ளிகள், கல்லூரிகள் உருவாவதற்கு ஆவண செய்தார். தலைவர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்ற பின்பு ஊர்தோறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளை அமைத்ததோடு இலவசப் பேருந்துப் பயணத்திட்டத்தைக் கொண்டுவந்தார்.

இந்தியாவில் இன்று தமிழ்நாட்டில் இருக்கும் மாணவர்களுக்குத்தான் பிகாருக்கோ, உத்தரபிரதேசத்துக்கு, மத்திய பிரதேசத்துக்கு ஏன் எந்த இந்தி பேசும் மாநிலத்துக்குச் சென்றும் வேலை பார்க்கும் வட இந்தியக் கனவு இல்லை. மாறாக அமெரிக்கா, லண்டன், சிங்கப்பூர் என்று மேலை நாட்டுக் கனவு இருக்கிறது. அதற்குக் காரணம் பேரறிஞர் அண்ணா தாய்மொழியோடு இணைப்பு மொழியாக ஆங்கிலத்தைப் படிக்க வேண்டும் என்று இருமொழிக் கொள்கையைக் கொண்டுவந்ததுதான். அதனால்தான் இடைநிற்றல் இல்லாமல் பள்ளிக்கல்வியை முடித்துவிட்டு உயர்கல்வி படிக்கச் செல்லும் மாணவர்கள் விகிதாசாரம் 53 விழுக்காடு பெற்று இந்தியாவில் முதலிடத்திலிருக்கிறது தமிழ்நாடு. இந்த இலக்கை எட்டுவதற்குத் திராவிட இயக்கங்களின் பங்கு மிகப்பெரியது. தமிழ்நாட்டின் முதலமைச்சராக கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்ற பிறகு கல்வி மேம்பாட்டுக்குப் பல ஆயிரம் கோடி ரூபாயை ஒதுக்கி, காலை உணவுத்திட்டம் மூலம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு தொடக்கப்பள்ளி மாணவர்கள் பசியின்றி பள்ளிப் படிப்பை மகிழ்ச்சியாகத் தொடர வழிவகை செய்திருக்கிறார். கூடுதல் வகுப்பறைகள் தொடங்கி, இடைநிற்றல் இல்லாத மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்திருக்கிறது. அரசுப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் வெளிநாடுகளில் செல்வதற்கும் அரசுப்பள்ளி வருமையின் அடையாளம் அல்ல பெருமையின் அடையாளமாகவும் மாற்றியிருக்கிறார்.

உயர்கல்வியிலும் ஆராய்ச்சி கல்வியிலும் கவனம் செலுத்த தமிழ்ப்புதல்வன், நான் முதல்வன், புதுமைப் பெண் எனப் பல திட்டங்களைக் கொண்டு வந்திருக்கிறார். ஒன்றிய பா.ஜ.க அரசு கல்வியில் மதத்தைப் புகுத்தி, புதிய கல்விக் கொள்கை எனும் மதயானையின் மூலம் எல்லோரும் கல்வி பெறும் சூழலைச் சூழலைச் சிதைத்து, இந்தியைத் திணித்து நமது கலாச்சாரம், தொன்மத்துக்கு எதிராகசமஸ்கிருதத்தைமுன்னிலைப்படுத்தி, பல்கலைக்கழக மானியக் குழு என்ற பெயரில் பல்கலைக் கழகங்களில் துணை வேந்தர் நியமனத்துக்கு முட்டுக்கட்டை போடுகிறது. கல்லூரிப் பேராசியர்கள் நியமனத்துக்குத் தடை போடுவதோடு இங்கிருக்கும் ஊதியம் கொடுக்கும் கல்வி நிறுவ னங்களை மேம்படுத்தவும் நிதி ஒதுக்க மறுக்கிறது. பள்ளிக்கல்விக்கு வரவேண்டிய அடிப்படை நிதியைக் கொடுக்காமல் வஞ்சிப்பதோடு உயர்கல்விக்கான நிதியையும் கொடுக்காமல் தடித்தனத்தோடு நடந்துகொள்கிறது.

இவற்றையெல்லாம் கண்டித்து கல்வியில் தமிழ்நாட்டு மாணவர்களுக்கான சம உரிமையைப் பாதுகாக்கும் போராட்டத்தில் சாதி, மதம், இனம், மொழி கடந்து எல்லோரும் ஓரணியில் சேரவேண்டும் என ஓர் இயக்கத்தை முன்னெடுத்திருக்கிறார் தமிழ்நாடு முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வி உரிமையைக் காக்க அனைவரும் குரல் கொடுக்க வேண்டும்

தமிழ்நாடு என்பது எப்போதும் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்றும் அன்னைத் தமிழைப் பாதுகாப்பதில் முன்னத்தி ஏராகவும் இருந்து வருகிறது. இதை நாம் அடுத்த தலைமுறைக்கும் கொண்டுசேர்க்க வேண்டுமானால் கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் கரம் பற்றி, இளைந்தலைவர் உதய் அண்ணாவின் வழிகாட்டுதலோடு மாணவர்கள் அனைவரும் ஓரணியில் இணைவோம்... வாருங்கள்...

மாணவர்களின் கல்வி உரிமையைக் கண்போலக் காக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் பாதை தெளிவானது. பயணம் உறுதிமிக்கது. இடையூறுகள் அவதூறுகள் எதுவாக இருந்தாலும் அவற்றை முறியடித்து கடக்கும் வலிமை கொண்டது. பெருமைமிக்க தமிழ்நாட்டின் மாணவர்களே வாருங்கள்! உங்களால் உருவாகும் ஓரணியில் தமிழ்நாடு!” என ஒன்றிய அரசு தமிழ்நாட்டு மாணவர்களின் கல்விக் கனவை காவு வாங்குவது குறித்தும், தமிழ்நாடு அரசு மாணவர்களுக்குச் செய்யும் நலத் திட்டங்கள் குறித்தும் விவரித்து துண்டறிக்கை அளிக்கப்பட்டது.

ஜூலை 21ஆம் தேதி தொடங்கிய இந்த விழிப்புணர்வுப் பிரச்சாரம் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்துக் கல்லூரிகளிலும் நடைபெறும். இதை ஓர் இயக்கமாக மாணவர் அணி முன்னெடுக்கும் எனவும் மாணவர் அணி சார்பில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.